முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டையிலே இருந்து 7 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற திருப்பத்தூரிலே தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஜோலார்பேட்டை பகுதியிலே அவர் வேண்டுமென்று கேட்கிறார். எனவே, கணிப்பு மேற்கொள்ளப்படும். மேலும் இடங்கள் அங்கே தேவைப்படுகிறது. எனவே, வீட்டுவசதி வாரியத்திற்கு நிலங்கள் கிடைத்த பிறகு, அங்கே கணிப்பு மேற்கொள்ளப்பட்டு, போதுமான விண்ணப்பங்கள் இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 429, திரு. சி. இராமசுவாமி, இருக்கையில் இல்லை. திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

429--

கல்வராயன்மலையில் காளான் வளர்ப்புப் பண்ணை அமைத்தல்

*24948-திரு. சி. **இராமசுவாமி:***

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கல்வராயன் மலையில் காளான் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கல்வராயன் மலையில் காளான் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எனவே, அடுத்த வினாவுக்கு பதில் எழவில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காளான் வளர்ப்பு தற்போது மிக அதிகமாக, வேகமாக மக்கள் மத்தியில் பரவி வருகின்றது. அதைவிட, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு இந்தக் காளான்

1994 ஏப்ரல் 28]

இப்போது வளர்ச்சி அடைந்து வருகின்றது. எனவே, மலையடியில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்குப் பண்ணையை ஏற்படுத்திக் கொடுத்தால், அதன்மூலம் வருவாயை ஈட்டி அவர்களுடைய வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள வசதி ஏற்படும். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து, இந்தக் காளான் வளர்ப்புக்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடுத்த வினாவினுடைய அவசியத்தை அறிந்துதான் இன்றைக்குத் தமிழக அரசு, இந்தக் காளான் வளர்க்கக் கூடிய தொழிலில் ஈடுபடக்கூடிய ஏழையெளிய சிறு விவசாயிகளுக்கு வேண்டிய பயிற்சியை அரசு வழங்கி வருகிறது. அதே நேரத்தில் இதற்கு ஆதாரமான விதைக் காளான் உற்பத்தி நிலையங்கள்தான் நாட்டுக்குத் தேவை. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இவ்வாண்டு இரண்டு விதைக் காளான் நிலையங்களும், இரண்டு நுண்கிருமி நீக்கம் செய்யப்பட்ட கம்போஸ்ட் உற்பத்தி நிலையங்களும் அமைப்பதற்கு ஆணை வழங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *430*, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

430---

ஓசூரில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

24563*-திரு. கே. ஏ. **மனோகரன்:

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஓசூர், தேன்கனிக்கோட்டைப் பகுதியில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதியில் உள்ள *20* ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களில், *9* கூட்டுறவுச் சங்கங்கள் தேன்கனிக்கோட்டை பகுதியிலும் *5* கூட்டுறவுச் சங்கங்கள் ஓசூர் பகுதியிலும் இயங்கி வருகின்றன. மீதமுள்ள *6* கூட்டுறவுச் சங்கங்களில்